# 2 விந்தையான ஒன்று

ஓர் ஊரில் முதியவர் ஒருவர் இருந்தார். ஊருக்கு யார் புதிதாக வந்தாலும் வந்தவரை வரவேற்றுச் சுவையாகப் பேசிக் கொண்டிருப்பார் அவர்.


ஒருமுறை அந்த ஊருக்கு இளைஞன் ஒருவன் வந்தான். அவனிடம் வழக்கம் போல் அவர் பேசிக்கொண்டிருந்தார்.

அந்த இளைஞன் அவர் பேச்சில் சிறிதும் ஈடுபாடு காட்டவில்லை. படிப்பு அறிவில்லாத இந்தக் கிழவன், நிறையப் படித்துள்ள என்னிடம் என்ன சொல்லப் போகிறார் என்று தனக்குள் நினைத்தான்.

அவன் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டார் அவர். அவனுக்கு அறிவு புகட்ட வேண்டும் என்று நினைத்தார்.

‘‘தம்பி! நான் ஒரு விடுகதை போடுகிறேன். உன் படிப்பறிவைக் கொண்டு அதை விடுவி பார்ப்போம் என்றார்.‘‘என்ன சொல்லுங்கள்?’’ என்று கேட்டான் அவன்.

‘‘மேலே நாலு கால் இருக்கும். கீழே எட்டுக் கால் இருக்கும். ஐந்து தலை உண்டு. ஒரு வால் இருக்கும். அது என்ன? இதுதான் விடுகதை. விடுவி பார்ப்போம்.’’



அந்த இளைஞன் தன்னால் முடிந்தவரை முயற்சிசெய்து பார்த்தான். அவனால் முடியவில்லை.

தலை கவிழ்ந்தபடி முதியவரைப் பார்த்து, “ என்னால் முடியவில்லை, நீங்களே விடை சொல்லுங்கள் ” என்றான்.

அதற்கு அவர் “நீ இந்த ஊரில் சில நாட்கள் தங்கப் போகிறாய். இங்கு நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கூர்ந்து கவனி. உனக்கு விடை கிடைத்து விடும்.

அது மட்டும் அல்ல, படிப்பறிவிற்கு எந்த விதத்திலும் குறைந்தது அல்ல அனுபவ அறிவு என்பதையும் உணர்ந்து கொள்வாய்.

உன்னால் விடையே கண்டுபிடிக்க முடியாவிட்டால் அதன் பிறகு என்னிடம் வா. நான் சொல்கிறேன்” என்றார்.

அவனும் அந்த ஊரில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்தான். சில நாட்களில் அவனுக்கு விடை கிடைத்து விட்டது.

அப்படியானால், அந்த விடுகதைக்கு விடை என்ன?

- எ. சோதி
‘புதிர்க்கதைகள்’

## சொல் அறிமுகம்

## වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| 1. | விந்தை | - | පුදුම/අමුතු |
| 2. | வரவேற்றல் | - | පිළිගැනීම |
| 3. | வழக்கம் போல | - | සුපුරුදු පරිදි |
| 4. | ஈடுபாடு | - | ලැදියාව |
| 5. | படிப்பறிவு | - | අධ්‍යාපනික දැනුම |
| 6 | விடுகதை | - | තේරවිලි |
| 7. | தலை கவிழ்ந்தபடி | - | ලැජ්ජාවට පත් වී හිස නමා |
| 8. | நடக்கும் | - | සිදුවෙයි/පැවැත්වෙයි |
| 9. | நிகழ்ச்சி | - | සිදුවීම/වැඩසටහන් |
| 10 | கூர்ந்து | - | දැඩි අවධානයෙන් |
| 11. | உணர்ந்து கொள்வாய் | - | වටහා ගනියි |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පහත දී ඇති ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. சுவையாகப் பேசுபவர் யார்?
2. இளைஞன் தனக்குள் நினைத்துக் கொண்டது என்ன?
3. இளைஞனிடம் கேட்கப்பட்ட வினா என்ன?
4. இளைஞன் எவ்வாறு விடையினைத் தெரிந்து கொண்டான்?
5. இக்கதை புகட்டும் பாடம் யாது?

### செயற்பாடு - I

1. வாயிலிருந்து நூல் எடுப்பான்.
   மந்திரவாதி அல்ல.
   எதிரெதிரே தாவுவான் குரங்கும் அல்ல.
   வலை விரித்துக் காத்திருப்பான்
   வேடனும் அல்ல. அவன் யார்?

2. கல்லாலும் மண்ணாலும் கட்டாத வீடு,
   கதவு இல்லாத வீடு, காற்றினிலே ஆடும் வீடு. அது என்ன?

## செயற்பாடு - II

கீழ் இருக்கும் சொற்களில் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து கீழே தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள கீறிடப்பட்ட இடங்களை நிரப்புவோம்.
(පහත දී ඇති වචනය තෝරා ඡේදයේ හිස්තැන් පුරවන්න.)

| | |
|---|---|
| ஐந்து | வந்தான் |
| வாலும் | ஊருக்குப் |
| சுவையாகப் | வழக்கம் போல |
| விடுகதையைக் | நாலு |
| எட்டுக் | |

ஒரு முதியவர் தனது ............................ புதிதாக வருபவரிடம் ..................... பேசுவார். ஒரு நாள் இளைஞன் ஒருவன் ..................... அவனுடன் முதியவர் ............................. பேசினார். அப்போது இளைஞனிடம் ஒரு ........................... கேட்டார். அவ்விடுகதை மேலே ................................ காலும், கீழே ............................. காலும் .............................. தலைகளும், ஒரு .................... இருக்கும். அது என்ன? என்பதாகும்.

## செயற்பாடு - III

**ஒத்தகருத்துச் சொற்களை எழுதுவோம்.**

**සමාන පද ලියමු**

1. முதியவர் - ........................................
2. சுவையாக - ........................................
3. எண்ணம் - ........................................
4. சொல்லுங்கள் - ........................................

5. இயலவில்லை - ........................................

6. விடை - ........................................

7. விந்தை - ........................................

8. அறிவு - ........................................

9. ஊர் - ........................................

10. விடுகதை - ........................................

## செயற்பாடு - IV

**எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுவோம்.**
**විරුද්ධ පද ලියමු**

1. புதிய - ............................
2. இளமை - ............................
3. சில - ............................
4. விடை - ............................
5. உண்டு - ............................

## செயற்பாடு - V

**சரியான சிங்களச் சொல்லை இணைப்போம்.**
**නිවැරදි සිංහල වචනය යා කරමු**

| | | |
|---|---|---|
| 1. | இளைஞன் | පළපුරුද්ද |
| 2. | மாடு | මහල්ලා |
| 3. | அனுபவம் | පිළිගැනීම |
| 4. | முதியவர் | හරකා/ගවයා |
| 5 | வரவேற்பு | තරුණයා |

# இலக்கணம்

## ஒருமை பன்மை

**ஒருமை :** ஒன்றைக் குறிப்பது.

**பன்மை :** பலவற்றைக் குறிப்பது. (ஒன்றுக்கு மேற்பட்டவற்றை)

உதாரணம் 1 :-

| ஒருமை | - | பன்மை |
|---|---|---|
| பூனை | - | பூனைகள் |
| மான் | - | மான்கள் |
| சட்டி | - | சட்டிகள் |
| பேனை | - | பேனைகள் |

உதாரணம் 2 :-

| ஒருமை | - | பன்மை |
|---|---|---|
| மரம் | - | மரங்கள் |
| காகம் | - | காகங்கள் |
| புத்தகம் | - | புத்தகங்கள் |
| குடம் | - | குடங்கள் |

உதாரணம் 3 :-

| ஒருமை | - | பன்மை |
|---|---|---|
| அரசன் | - | அரசர்கள் |
| புலவன் | - | புலவர்கள் |
| மன்னன் | - | மன்னர்கள் |
| கவிஞன் | - | கவிஞர்கள் |

உதாரணம் 4 :-

| ஒருமை | - | பன்மை |
|---|---|---|
| பூ | - | பூக்கள் |
| ஈ | - | ஈக்கள் |
| எழுத்து | - | எழுத்துக்கள் |

உதாரணம் 5 :-

| ஒருமை | - | பன்மை |
|---|---|---|
| புல் | - | புற்கள் |
| பல் | - | பற்கள் |
| சொல் | - | சொற்கள் |
| கல் | - | கற்கள் |

உதாரணம் 6 :-

| ஒருமை | - | பன்மை |
|---|---|---|
| வாள் | - | வாட்கள் |
| முள் | - | முட்கள் |
| நாள் | - | நாட்கள் |

உதாரணம் 7 :-

| ஒருமை | - | பன்மை |
|---|---|---|
| அம்மா | - | அம்மாமார் |
| மாமா | - | மாமாமார் |
| தங்கை | - | தங்கைமார் |
| தாத்தா | - | தாத்தாமார் |

உதாரணம் 8 :-

| ஒருமை | - | பன்மை |
|---|---|---|
| பார்த்தான், பார்த்தாள், பார்த்தார் | → | பார்த்தார்கள் |
| கேட்டாள், கேட்டான், கேட்டார் | → | கேட்டார்கள் |
| பாடினான், பாடினாள், பாடினார் | → | பாடினார்கள் |

- ஓடியது - ஓடின

உதாரணம் 9 :-

| | | |
|---|---|---|
| அவன், அவர்கள், அவர் | → | அவர்கள் |
| இவன், இவள், இவர் | → | இவர்கள் |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

உதாரணம் 10 :-

| | | | |
|---|---|---|---|
| இது | - | இவைகள் / | இவை |
| அது | - | அவைகள் / | அவை |
| எது | - | எவைகள் / | எவை |

## செயற்பாடு - VI

**பின்வரும் வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றுங்கள்.**

- மான் குட்டி துள்ளித் துள்ளிப் பய்ந்தது.
- அவன் அழகாக தமிழ்ப் பாடல் பாடினான்.
- குருவி கூடு கட்டியது.
- பேனை கீழே விழுந்தது.
- ஆசிரியர் கதை கூறினார்.

## செயற்பாடு - VII

பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கு உரிய சிங்களச் சொற்களையும் சிங்களச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களையும் எழுதுவோம்.

**පහත සඳහන් දෙමළ වචනවලට සුදුසු සිංහල වචනත්, සිංහල වචනවලට සුදුසු දෙමළ වචනත් ලියමු.**

1. தலை - ..............................
2. அது - ..............................
3. போகிறான் - ..............................
4. விடுகதை - ..............................
5. விடை - ..............................
6. ගම - ..............................
7. තරුණයා - ..............................
8. මල්ලි - ..............................
9. ගස - ..............................
10. ආවේය - ..............................

## இலக்கணம்

### வினைச்சொல்

செயலை உணர்த்தும் சொல் வினைச்சொல் எனப்படும்.

***உதாரணம் : 1***

| | | |
|---|---|---|
| வா | விளையாடு | சாப்பிடு |
| போ | பார் | குடி |
| இரு | சிரி | ஓடு |
| நட | எழுது | சொல் |
| கதை | | |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## உதாரணம் : 2
**காலம் காட்டும் வினைச் சொற்கள்.**

| | | |
|---|---|---|
| வந்தான் | பார்க்கின்றேன் | சாப்பிடுவேன் |
| போனேன் | எழுதுகின்றோம் | சிரிப்பார் |
| இருந்தார் | கதைக்கின்றார் | எழுதுவாள் |
| நடந்தாள் | ஓடுகின்றேன் | நடப்பார்கள் |
| ஓடினேன் | ஆடுகின்றார் | விளையாடுவான் |

## செயற்பாடு - VIII
**தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| சித்திரம் | சாப்பிட்டேன் |
| அப்பா | வாசித்தேன் |
| பறவைகள் | வந்தார் |
| நான் | பறந்தன |
| புத்தகம் | வரைந்தேன் |

## செயற்பாடு - IX
**பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச்சொற்களின் கீழ் கீறிடுவோம்.**

**පහත සඳහන් වාක්‍යවල ඇති ක්‍රියාපදය සොයා ඒ යටින් ඉරක් අඳිමු.**

1. முதியவருடன் இளைஞன் பேசினான்.
2. புதிதாக வந்தான் ஓர் இளைஞன்.
3. படித்த இளைஞனிடம் முதியவர் விடுகதை போட்டார்.
4. இளைஞன் விடையைக் கண்டு பிடித்தான்.
5. இறந்த ஒரு மிருகத்தைத் தூக்கிச் சென்றார்கள்.

## செயற்பாடு - X

**பின்வரும் வினைச்சொல் அட்டவணையைப் பூர்த்தி செய்வோம்.**
**පහත එන ක්‍රියා පද වගුව සම්පූර්ණ කරමු.**

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| 1. கண்டுபிடித்தான் | ........................ | ........................ |
| 2. பேசிக்கொண்டிருந்தனர் | ........................ | ........................ |
| 3. ........................ | ........................ | போவார் |
| 4. ........................ | பார்க்கின்றான் | ........................ |
| 5. ........................ | ........................ | இருக்கும் |

## இலக்கணம்

### முற்றும் எச்சமும்

**வினைமுற்று / வினையெச்சம்**

உதாரணம் - வாசித்தார் - அப்பா பத்திரிக்கை வாசித்தார்.
கூறினான் - விமல் ஒரு கதை கூறினான்.
சிரித்தேன் - நான் சிரித்தேன்.

வாசித்தார்
கூறினார்
சிரித்தேன்
} வினை முற்றுக்கள்

## பெயரெச்சம்

1. வந்த மனிதன் பாட்டுப் பாடினான்
2. ஓடிய பிள்ளை கீழே விழுந்தது.
3. சோறு சாப்பிட்ட அப்பா கை கழுவினார்.

வந்த
ஓடிய
சாப்பிட்ட } பெயரெச்சம்

## வினையெச்சம்

1. கமல் எழுந்து சென்றான்.
2. கமலினி புத்தகத்தை வாசித்து முடித்தாள்.
3. கதையைப் பார்த்து வாசித்தேன்.
4. பாடலைப் பாடி மகிழ்ந்தார்கள்.

எழுந்து
வாசித்து
பார்த்து
பாடி } வினையெச்சம்

### செயற்பாடு - XI

**இடைவெளிகளுக்குப் பொருத்தமான எச்சவினைச் சொற்களை எழுதுவோம்.**

හිස්තැන්වලට සුදුසු පූර්වක්‍රියා පදය ලියමු.

1. நான் பாடசாலைக்கு ................... சென்றேன்.
2. நடனம் ..................... சிறுமியைப் பாராட்டினார்.
3 ..................... நண்பனைத் தூக்கி நிறுத்தினேன்.
4. சிட்டுக் குருவி .......................... சென்றது.
5. அந்த ஊருக்கு .................. இளைஞன் முதியவரைச் சந்தித்தான்.